பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 06 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி ஜம்மு காஷ்மீரில் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

2. மத்திய ஆசிய நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து நிறைவேற்ற மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும் வியட்நாமும் முடிவு செய்துள்ளன.

5. நார்வே சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி ஜம்மு காஷ்மீரில் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

உதம்பூர் - ஸ்ரீநகர் - பாரமுல்லா வழித்தட இணைப்பு திட்டத்தை நாட்டுக்கு அவர் அர்ப்பணிக்கிறார்.

ஜம்மு-கஷ்மீரில் இரண்டு வந்தே பாரத் ரயில் சேவைகளையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

கத்ரா - ஸ்ரீநகர் இடையே உலகின் மிக உயரமான **Chenab** பாலத்தையும், இந்தியாவின் முதலாவது கம்பி வழித்தட ரயில் பாலமான **Anji**-யையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

கத்ராவில் மாதா வைஷ்ணவ் தேவி உயர் சிறப்பு மருத்துவ மையத்திற்கும் திரு. நரேந்திர மோடி அடிக்கல் நாட்ட உள்ளார்.

<<<<>>>>

மத்திய ஆசிய நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்தியா – மத்திய ஆசிய வர்த்தக கவுன்சில் கூட்டத்தில் பேசிய அவர், 2014ஆம் ஆண்டில் இருதரப்பு வர்த்தகம் 500 மில்லியன் டாலர் என்ற அளவில் இருந்ததாகவும், தற்போது அது 2 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது என்றும் கூறினார்.

சுகாதாரம், மருந்துகள், நிதி சேவைகள், கல்வி, சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் இந்தியாவுக்கும் - மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்று புதுதில்லியில் நடைபெறும் மத்திய-ஆசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் திரு. ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார்.

இக்கூட்டத்தில் பங்கேற்க புதுதில்லி வந்துள்ள உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் அமைச்சர்களுடன் நேற்று திரு. ஜெய்சங்கர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

<<<<>>>>

மத்திய வக்ஃப் கவுன்சிலை மேலும் வலுவானதாக மாற்றுவதே அரசின் நோக்கம் என்று சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் மரக்கன்றுகள் நடும் இயக்கத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வக்ஃப் சொத்துக்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தும் வகையிலேயே அது தொடர்பான திருத்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளதாகக் கூறினார்.

இந்த சொத்துக்களை பதிவு செய்வதற்கான இணையதளம் இன்று முதல் செயல்பாட்டிற்கு வர உள்ளதாகவும், மாநில அரசுகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி தரவுகளை உரிய முறையில் பராமரிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஐரோப்பிய யூனியனுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து நிறைவேற்ற இந்தியா உறுதி பூண்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

அரசு முறைப் பயணமாக இத்தாலி சென்றுள்ள அவர் இத்தாலி-இந்தியா வர்த்தக மன்றக் கூட்டத்தில் உரையாற்றினார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இந்த ஆண்டுக்குள் இறுதி செய்ய பிரதமர் திரு நரேந்திர மோடியும் ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி ஊர்சுலா வான் டெர் லேயனும் முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்தாலியுடன் வலுவான வர்த்தக உறவுகள் பராமரிக்கப்படுவதாக அவர் கூறினார்.

அந்நாட்டுடனான வர்த்தகம் 14 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது என்றும் திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை அனைவரும் தவிர்க்க வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிளாஸ்டிக் பொருட்களின் மறுசுழற்சிக்கான தொழில்நுட்பத்தை திறம்பட பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தில்லியில் மின்சார பேருந்துகளின் பயன்பாடு அதிகரிக்கப்படும் என்றும், இதன்மூலம் காற்று மாசு பெருமளவில் குறையும் என்றும் திரு. பூபேந்தர் யாதவ் கூறினார்.

தில்லி துணைநிலை ஆளுநர் திரு. வினய்குமார் சக்சேனா, முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

<<<<>>>>

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும், வியட்நாமும் முடிவு செய்துள்ளன.

புதுதில்லி வந்த வியட்நாமின் தகவல் மற்றும் மக்கள் தொடர்பு ஆணையத்தின் தலைவர் திரு. **Nguyen Trong Nghia** தலைமையிலான தூதுக் குழு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகனை நேற்று சந்தித்துப் பேசியது.

மும்பையில் நடைபெற்ற வேவ்ஸ் உச்சிமாநாட்டில் வியட்நாம் ஆர்வத்துடன் பங்கேற்றதற்கு திரு. எல். முருகன் பாராட்டு தெரிவித்தார்.

இரு நாடுகளிலும் உள்ள ஊடக நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கலாச்சார தொடர்புகளை மேலும் வலுப்படுத்தவும் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இந்த கூட்டத்தில் தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு. சஞ்சய் ஜாஜு உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<>>>>

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து இணைந்து செயல்படும் என்று அமெரிக்கா சென்றுள்ள இந்திய தூதுக்குழுவின் தலைவர் திரு சசி தரூர் கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக எடுத்துரைக்க அமைக்கப்பட்ட இந்தக் குழு நேற்று அமெரிக்க துணை அதிபர் திரு ஜேடி. வான்ஸைச் சந்தித்துப் பேசியது.

பயங்கரவாத எதிர்ப்பில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டதாக திரு சசி தரூர் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என திரு சசி தரூர் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் முன்னேற்றத்திற்கு சமூக நல்லிணக்கம் அவசியம் என ஆர்எஸ்எஸ் தலைவர் திரு. மோகன் பகவத் கூறியுள்ளார்.

நாக்பூரில் நடைபெற்ற அந்த அமைப்பின் 25 நாள் பயிற்சி முகாமின் நிறைவு விழாவில் பேசிய அவர், தேசத்தின் உண்மையான பலம் சமூக ஒற்றுமையில் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்லப்படதற்கு இந்தியா உரிய பதிலடி கொடுத்துள்ளதாக அவர் கூறினார்.

பாதுகாப்பு சார்ந்த விஷயங்களில் நாடு தன்னிறைவு பெற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அந்த நாடுகள் விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என திரு மோகன் பகவத் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் காஞ்சிபுரத்தில் இந்தியன் வங்கி சார்பில் நடத்தப்படும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் மூலம் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பெருமளவில் பயனடைவதாக அந்த மையத்தின் இயக்குநர் திரு. உமாபதி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## (Voice Byte – Umapathy – 48 sec)

இந்தப் பயிற்சியை வழங்கும் மத்திய அரசுக்கும், இந்தியன் வங்கிக்கும் நன்றி தெரிவிப்பதாக இதில் பயன்பெற்ற இளைஞர்கள் தெரிவித்தனர்.

## (Voice Byte – Students – 42 sec)

<<<<>>>>

நிலக்கரி அமைச்சகத்திற்கது சொந்தமான இடங்களில் கடந்த நிதியாண்டில் 54 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

புதுதில்லியில் மரக்கன்றுகள் நடும் இயக்கத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் நிலக்கரித் துறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முக்கிய முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

நார்வே சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

9வது சுற்றில் சீனாவின் **Wei Yi**-ஐ வென்ற அவர், 14 புள்ளி 5 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ராதிகா சுதந்திரசீலன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-8, 6-11, 11-8, 11-9 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Risa Sugimoto**-வை வென்றார்.

<<<<>>>>

ஸ்பெயின் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

தேசிய மோட்டார் பைக் சாம்பியன்ஷிப் போட்டி சென்னையை அடுத்த இருங்காட்டுக்கோட்டையில் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

**Tashkent**-ல் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - தாய்லாந்தின் **Punnin** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-2 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் **Ingkar – Anastasiya** இணையை வென்றது.

**<<<<The End>>>>**